மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2021

## மனைப்பொருளியல்

| சுட்டெண் : .............................. | தரம் :- 11 | நேரம் : 1 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி - I

**அறிவுறுத்தல்**

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக. (பகுதி I)
2. 1-40 வரையான வினாக்களுக்கு 1, 2, 3, 4 அடையாளமிட்ட விடைகளில் பொருத்தமான விடையை தெரிவு செய்து (X) அடையாளமிடுக.

1. பார்லி, கோதுமையில் காணப்படும் இருசக்கரைட்டு எது?
   1) குளுக்கோஸ் 2) பிறக்ரோஸ் 3) கலற்றோஸ் 4) மோல்ட்டோஸ்

2. இன்சுலினின் ஒரு கூறாக தொழிற்படும் நுண்கனியுப்பு எது?
   1) நாகம் 2) இரும்பு 3) கல்சியம் 4) பொஸ்பரசு

3. விற்றமின் $B_5$ இன் இரசாயனப் பெயர் யாது?
   1) நயசின் 2) தயமின்
   3) பந்தோதெனிக்கமிலம் 4) பிரிடொக்சின்

4. பெக்டின் அதிகம் கொண்ட பழவகை எது?
   1) மாம்பழம் 2) றம்புட்டான் 3) வில்வம்பழம் 4) மங்குஸ்தான்

5. கோழிஇறைச்சியின் தசைப்பகுதியில் காணப்படும் புரதம் யாது?
   1) இலாஸ்டின் 2) கேசின் 3) செயின் 4) குளுட்டன்

6. நாள் ஒன்றுக்கு உணவுக்கூம்பகத்தின் அடிப்படையில் மீன், முட்டை, இறைச்சி உள்ளெடுக்க வேண்டிய அளவு யாது?
   1) 6 - 11 2) 3 – 4 3) 1 – 2 4) 2 -3

7. புரத சமிபாடு ஆரம்பிக்கும் இடம் எது?
   1) வாய்க்குழி 2) இரைப்பை 3) முன்சிறுகுடல் 4) பெருங்குடல்

8. விற்றமின் $B_2$ அதிகம் கொண்ட பருப்பு வகை எது?
   1) கடலை 2) உழுந்து
   3) கௌப்பி 4) சோயப்பருப்பு



kalvi.lk

9. செலனியத்தின் தொழிற்பாடு யாது?
   1) இன்சுலினின் ஒரு கூறாகும்   2) மெலனின் உற்பத்தி செய்யும்
   3) என்பு, பல்விருத்திக்குதவும்   4) ஓட்சியேற்ற எதிரியாக தொழிற்படல்

10. பெருங்கடலின் தொழிற்பாடாக **அமையாதது** எது?
   1) நீர்அகத்துறிஞ்சல்   2) எண்ணெய், கொழுப்பு அகத்துறிஞ்சல்
   3) நுண்ணுயிர் இயக்கம்   4) கனியுப்பு, விற்றமின் அகத்துறிஞ்சல்

11. உலர் உணவுப் பொருளை பொதி செய்யும் போது சிலிக்காகெல் பயன்படுத்துவதன் நோக்கம் யாது?
   1) ஈரப்பற்றை கட்டுப்படுத்த   2) வெப்பநிலையை அதிகரிக்க
   3) வெற்றிடத்தை அதிகரிக்க   4) சுவையை அதிகரிக்க

12. ஆழமான எண்ணெயில் பொரித்தல் தொடர்பான **பிழையான** கூற்று எது?
   1) எண்ணெய்கொதித்தும் உணவை இடல்
   2) மேற்காவுகை மூலம் பாத்திரம் சூடாகி கடத்தல் மூலம் உணவுசமைக்கப்படும்
   3) பொன்னிறமாகும் வரை பொரித்தல்
   4) பொரித்தபின் எஞ்சிய எண்ணெயை மீண்டும், மீண்டும் உபயோகிக்காதிருத்தல்

13. விருந்தினருக்கான உணவை சமையலறையில் வைத்து இடப்படுவதுடன், கடிகார முள் சுற்றும் திசையில் பரிமாறப்படும் உணவு பரிமாறல் முறை எது?
   1) ஜேர்மன் முறை   2) அமெரிக்கமுறை   3) பிரான்சியமுறை   4) சுயசேவை

14. வைபவங்களின் போது சஹான் தட்டில் உணவருந்தும் முறை எக் கலாச்சாரத்துக்குரியது?
   1) தமிழ்   2) இஸ்லாமியர்   3) பௌத்தம்   4) மேலைத்தேயம்

15. பாலைத் தயிராக்க உதவும் பற்றிரியா எது?
   1) மியுகோர்   2) அஸ்பஜிலஸ்
   3) ஸ்ரெப்ரோகொக்கஸ்லக்டீஸ்   4) பென்சிலியம்

16. மிக்ஸோரபீமா (Myxedema) என அழைக்கப்படும் அயடீன் குறைபாடு நிலை ஏற்படும் பருவம்.
   1) குழந்மைப்பருவம்   2) பிள்ளைப்பருவம்
   3) கர்ப்பிணிப்பருவம்   4) கட்டிளம்பருவம்

17. புரதகலோரி குறைபாட்டு நோயின் அறிகுறி **அல்லாதது**
   1) தேய்வடைந்த உடல்   2) சமிபாட்டு அகத்துறிஞ்சல் பலவீனம்
   3) வயிற்றோட்டம், வாந்தி   4) வயிறு முன்தள்ளல், வீக்கம்

18. உலக சுகாதார தாபனத்தின் கூற்றுப்படி கட்டிளம் பருவ வயதெல்லை யாது?
   1) 10 - 24 வயது   2) 10 – 19 வயது   3) 14 – 16 வயது   4) 15 – 17 வயது

19. கட்டிளம் பருவ பிள்ளைகளின் உளவிருத்தி செயற்பாடாக **அமையாதது**
   1) தர்க்கரீதியான சிந்தனை   2) வீரவணக்கம்
   3) ஆக்கத்திறன்   4) முடிவெடுக்கம் திறன்



kalvi.lk

20. பெண் பாலியல் ஓமோனாக கருதப்படுவது எது?

1) தெஸ்தெஸ்ரரோன் 2) அன்ரஜன் 3) ஈஸ்ட்ரஜன் 4) கபச்சுரப்பி

21. விந்தை உற்பத்தி செய்தல், சேமித்தல், ஓமோனை உற்பத்தி செய்தல் ஆகிய தொழிற்பாட்டைச் செய்யும் உறுப்பு எது?

1) விதை 2) சூலகம் 3) சுக்கிலக்கான் 4) கருப்பை

22. கர்ப்பிணித்தாயில் ஓமோன் சமநிலையின்மை காரணமாக **நிகழாத** அறிகுறி எது?

1) மாதவிடாய் தடைப்படல் 2) வாந்தி

3) அடிக்கடி சிறுநீர் கழித்தல் 4) மார்பகம் பருத்தல்

23. கர்ப்பகாலத்தில் இரும்பு பூரணப்படுத்தலுக்காக வழங்கப்படும் மாத்திரை

1) பெரஸ்பொசுபேற்று 50mg 2) பெரஸ்சல்பேற்று 100mg

3) போலிக்கமிலம் 50mg 4) போலிக்கமிலம் 100mg

24. கார்ப்பிணித்தாய்க்கு குருதிக்கனவளவு அதிகரிக்கவும், கருப்பை, கொப்பூழ்நாண், சூல்வித்தக வளர்ச்சிக்கு அவசியமான போசணை எது?

1) இரும்பு 2) விற்றமின் A 3) கல்சியம் 4) புரதம்

25. கர்ப்பகாலம் எனக் கருதப்படுவது யாது?

1) 35 வாரம் 2) 40 வாரம் 3) 42 வாரம் 4) 36 வாரம்

26. வலமிருந்து இடமாக ஆரம்பித்து முடிவில், புள்ளடி வடிவில் தைக்கும் தையல் எது?

1) சோம்தையல் 2) விஸ்பம்தையல்

3) சிறுநூலோடித்தையல் 4) நரம்புத்தையல்

27. அடிப்படைத்தையலில் ஒன்றாகவும், அலங்காரத்தையலாகவும், குவில் தைக்கவும் பயன்படும் தையல் எது?

1) சோம் தையல் 2) விஸ்பம்தையல்

3) சிறுநூலோடித்தையல் 4) நரம்பத்தையல்

28. எயர்டெக்ஸ், ஜாவா, அய்டா துணியில் தைக்கும் அலங்கார தையல் எது?

1) கம்பளித்தையல் 2) நரம்புத் தையல்

3) வெட்டுக்குத்துத்தையல் 4) சங்கிலித்தையல்

29. கனிய நார் **அல்லாதது** எது?

1) கண்ணாடி 2) அஸ்பெஸ்டஸ் 3) வெள்ளி 4) ரெயோன்

30. மீன் முள்ளுத் தையலால் அலங்கார நிழல் தோற்றம் தைக்க பயன்படும் துணி வகை

1) ஓகண்டி 2) ரெயோன் 3) விஸ்கோஸ் 4) பட்டு



kalvi.lk

31. 'கொஸிபியம்' என்ற செடியின் உலர்பழத்தின் பஞ்சில் தயாரிக்கும் நார்வகை எது?
   1) பட்டு   2) கம்பளி   3) லினன்   4) பருத்தி

32. குழந்தையாடை, உள்ளாடைக்கு பொருத்தமான பொருத்து வகை எது?
   1) தட்டைப்பொருத்து   2) சாதாரணபொருத்து
   3) பிரான்சியபொருத்து   4) மேற்செறி பொருத்து

33. ஆண்களின் காற்சட்டையில் தைக்கப்படும் பக்க பொருத்து யாது?
   1) பிரான்சிய பொருத்து   2) மேற்செறி பொருத்து
   3) தட்டைப் பொருத்து   4) சாதாரண பொருத்து

34. அப்ளிக் தையல், தைக்காவிளிம்பை சீர் செய்ய பயன்படும் தையல்வகை எது?
   1) கம்பளித்தையல்   2) நரம்புத்தையல்   3) சங்கிலித்தையல்   4) லேசிடேசித்தையல்

35. ஆடைகளின் விளிம்பை அலங்கரிக்க பயன்படும் முறை **அல்லாதது**
   1) இரேந்தைபிடித்தல்   2) சுருக்குப்பட்டிபிடித்தல்
   3) பைண்டிங்பிடித்தல்   4) அப்ளிக்பிடித்தல்

36. தளத்திட்டத்தை வரையும் போது மீற்றர், சென்ரிமீற்றர் முறையில் காட்டப்படுவது
   1) இம்பீரியல் முறை   2) மெட்றிக்முறை
   3) அங்குல முறை   4) வார்முறை

37. தேறிய வருமான வழிகளில் ஒன்று எது?
   1) சம்பளம்   2) வரி   3) பொருட்கள்   4) வட்டி

38. பல்வேறு செயற்பாடுகளில் ஒரு நபரிடமிருந்து பெறக்கூடிய உடல், உள சக்தி யாது?
   1) மனப்பாங்கு   2) உழைப்பு   3) பணம்   4) நீர்

39. அழகான, மகிழ்ச்சியான, நெகிழும் தன்மை கொண்ட இயல்பை வெளிப்படுத்தும் கோடு
   1) நிலைக்குத்துக்கோடு   2) கிடைக்கோடு
   3) வளைகோடு   4) நெளிகோடு

40. மனை வரவு செலவுதிட்டத்தில் அமையும் மேலதிக செலவில் அடங்குபவை
   1) உணவு, போக்குவரத்து   2) விசேட வைபவம், திடீர்விபத்து
   3) ஆடைஅணிகலன், கல்வி   4) பொழுதுபோக்கு, மின்கட்டணம்



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community | Whatsapp Channel | Facebook Page